# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## முதலாம் ஆண்டு – இரண்டாம் பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2025
## C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சமூகவியல் அறிஞர்களின் பார்வையில் பண்பாடு என்பது என்ன?
2. இடக்கரடக்கல் என்றால் என்ன?
3. தமிழர்கள் மானக்கேடு எனக் கருதியது எது?
4. குமரிக்கண்டத்தின் இருப்பிடம் எது?
5. இசுலாமியக் காப்பியங்களில் குறிப்பிடத்தக்கது எது?இயற்றியவர் யார்?
6. தீபாவளிப்பண்டிகை எவ்வாறு தோன்றியது?
7. மருந்துநூல்கள் எனப்படுபவை யாவை?
8. ஏழு சுரங்களுக்குரிய தமிழ்ப் பெயர்கள் யாவை?
9. ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்த முதல் பாளையப்பட்டு மன்னன் யார்?
10. திரு.வி.க.நடத்திய இதழ்கள் யாவை?
11. வைக்கம் வீரர் யார்? அப்பெயர் பெறக்காரணம் என்ன?
12. சுதேசமித்ரனில் இருந்து பாரதியார் விலகக் காரணம் என்ன?
13. மெய்க்கீர்த்தி என்றால் என்ன?
14. முதல் கற்கோயில் கட்டியவன் யார்?
15. மக்கள் தாயம் என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. பண்பாடும் குறியீடும் குறித்து இயம்புக.
2. சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிக சமயப் பண்பாட்டை வெளிப்படுத்துவது எவ்வாறு?
3. மணிமேகலை காட்டும் பல சமயங்கள் குறித்து விவரிக்க.
4. திருவள்ளுவர் உணர்த்திய வாழ்வியல் அறங்கள் யாவை?
5. உப்பு அறப்போர் – குறிப்பு வரைக.
6. வ.உ.சிதம்பரனாரின் சிறை வாழ்வு குறித்து எழுதுக.
7. நடுகல் வழிபாட்டடினைப் புலப்படுத்துக.
8. கல்வெட்டியல் இலக்கியம் குறித்து எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழுக்கும் தமிழ்ப்பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்துரைக்க.

   (அல்லது)

   (ஆ) தமிழரின் கடவுள் கொள்கை வரலாற்றை விளக்கியுரைக்க.

2. (அ) நாயக்கர் கால கலை வளர்ச்சியை வெளிப்படுத்துக.

   (அல்லது)

   (ஆ) பழந்தமிழ்நாட்டின் அரசியலும் ஆட்சியும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

3. (அ) தமிழ்நாட்டின் உழவுத்தொழில் குறித்து விளக்கியுரைக்க.

   (அல்லது)

   (ஆ) சிலப்பதிகாரம் தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலம் என்பதை நிறுவுக.

❋ ❋ ❋